துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், எனது உத்தரவின்பேரில் காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களும் சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்று விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

சம்பவ இடத்தில் இரண்டு தோட்டாக்கள் மற்றும் இரண்டு காலி தோட்டாக்கள் ஆகியவற்றைக் காவல் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக களியக்காவிளை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து, காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வழக்கில் எதிரிகளை அடையாளம் கண்டு கைது செய்ய, நான்கு தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனிப்படையினர், அப்பகுதியிலுள்ள கடைகள் மற்றும் வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள CCTV பதிவுகளை ஆய்வு செய்து வருகின்றனர். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடித்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனை பெற்றுத்தர அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

மறைந்த திரு. வில்சனுக்கு மனைவி மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். அன்னாரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. வில்சன் அவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்படும். மேலும், அன்னாரது குடும்பத்தில் ஒருவருக்கு தகுதிக்கு ஏற்றாற்போல், கருணை அடிப்படையிலான அரசுப் பணி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) துறைமுகம் தொகுதி, சென்னை நதிகள் பாதுகாப்புத் திட்டம், கூவம் நதிக் கரையோரம் வசிக்கும் மக்களை மறுகுடியமர்வு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

முற்பகல் 11–20

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Chennai Rivers Restoration Trust–CRRT *எனப்படுகின்ற சென்னை நதிகள் பாதுகாப்புத் திட்டத்தின்படி, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காந்தி நகரில், தேசப்பிதா, நமக்கெல்லாம் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த அந்த மகாத்மா காந்தி அவர்களின் திருப்பெயரில் அமைந்திருக்கின்ற அந்த நகரில், கூவத்தைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையாக, 2,200 வீடுகளை, அப்பகுதியில் வசிக்கும் மக்களை பெரும்பாக்கம் திட்டப் பகுதிக்குக் கொண்டுசெல்கின்ற பணி கடந்த 10 நாட்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து 2017, 2018, 2019 ஆகிய 3 ஆண்டுகளில் அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக, அந்தப் பகுதியிலேயே இடங்களை ஆய்வு செய்து அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவோம் என்ற உத்தரவாதத்தைத் தந்தார்கள். நானும் அவர்களுக்கு 5 ஏக்கர் அளவிலே வால்டாக்ஸ் சாலையிலே இடமிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுத் தந்திருந்தேன். அதற்குண்டான பணிகள் தொடங்குவதற்கு முன்பாகவே, இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களை இப்பொழுது அங்கே மறுகுடியமர்வு செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தாழ்மையான கேள்வி, இதேபோன்று, பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பி.கே. காலனியிலே 864 வீடுகள் ஏற்கெனவே இருந்தன. தற்போது கூடுதலாக 1,100 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படி இங்கிருந்து அப்புறப்படுத்தப்படுகின்ற அந்த மக்களினுடைய வாழ்வாதாரத்தைக் கருத்திலேகொண்டு, இங்கே அவர்களுடைய தொழில், அன்றாட பழக்கவழக்கங்கள் ஆகியவை 40 கிலோ மீட்டர் தாண்டிச் செல்கின்றபோது, வாழ்வாதாரம் கேள்விக்குறியாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாக கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமானது. 10 ஆயிரம் பேர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லாமே முக்கியம்தான். அவையில் பேசுவது எல்லாமே முக்கியம்தான். சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு.பி.கே.சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு செய்தி. அவர்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாகின்ற நிலை இருக்கிறது. இப்போது 1,000 பேர்களுக்கு மேலாக, அங்கே மறுகுடியமர்விற்கு சென்றிருக்கின்றார்கள். அங்கே போதிய குடிநீர் வசதி, மின்சார வசதி, போன்றவை அந்த மக்கள் வசிக்கின்ற அளவிற்கு இல்லை. அங்கே பள்ளிக்கூடங்கள் இல்லை. இங்கே 300–க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கின்றார்கள். ஆண்டு இறுதித் தேர்வை நெருங்கிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அவர்களை அங்கே குடியமர்த்தினால், படிப்பும் கேள்விக்குறியாகின்றது. ஆகவே, இதையெல்லாம் கவனத்தில்கொண்டு, அருகிலே இருக்கின்ற பி.கே. காலனியில் கட்டப்படுகின்ற வீடுகளை ஒதுக்கித் தருவதோடு, ஏற்கெனவே குடியமர்த்தப்பட்டிருக்கின்ற 1,000 பேர்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைச் செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் இந்தக் கேள்வியை வைக்கின்றேன். சென்னையிலே பல இடங்களிலே இப்படி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டுவருகின்றன. துறைமுகம் பகுதியில் சாலையோரம் இருக்கின்ற மக்களுக்கும், அதில் மறுகுடியமர்வு செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் திட்டத்தினைச் செயல்படுத்திக்கொண்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், கூவம் நதிக் கரையோரம் வசிக்கும் 14,257 குடும்பங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. வாரியம், பொதுப் பணித்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றுடன் இணைந்து, இதுவரை 10,740 குடும்பங்களை வாரியத்தின் குடியிருப்புப் பகுதிகளான பெரும்பாக்கம், நாவலூர், கூடப்பாக்கம் மற்றும் அகில இந்திய வானொலி நிலைய திட்டப் பகுதிகளில் மறுகுடியமர்வு செய்துள்ளது. மேலும், 2015 ஆம் ஆண்டு, வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட அடையாறு நதி கரையோரங்களில் வசித்த 9,539

2020 ஜனவரி 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

குடும்பங்கள் கண்டறியப்பட்டு, 4,398 குடும்பங்கள் எழில் நகர், ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் திட்டப் பகுதிகளில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம், பொதுப் பணித் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து, தீவுத் திடல் எதிரே உள்ள சத்தியவாணிமுத்து நகர், மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கூறிய அந்தப் பகுதியில் கூவம் நதிக்கரையில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் 2,092 குடும்பங்களை கணக்கெடுப்பு செய்துள்ளது. இக்குடிசைப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும் பணி, கடந்த 29–12–2009 அன்று துவங்கப்பட்டு, 120 குடும்பங்கள் பெரும்பாக்கம் திட்டப் பகுதிக்கு மறுகுடியமர்வு செய்யப்பட்டன. இப்பணி 30–12–2019 அன்றும் நடைபெற்று 19 குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டன. பின்பு 30–12–2019 அன்று சில குடும்பங்களில், படிக்கும் குழந்தைகளின் கல்வி பாதிக்கும் என வலியுறுத்தி, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குடியமர்வு செய்யுமாறு கேட்டுக்கொண்டதன்பேரில், இப்பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, அதன் பின்பு சில குடும்பங்கள் தாங்கள் பெரும்பாக்கம் திட்டப் பகுதிக்கு மறுகுடியமர்வு செய்ய விருப்பம் தெரிவித்தன. அதாவது பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகள் இல்லாத குடும்பங்கள் பெரும்பாக்கம் பகுதிக்கு செல்ல தாமாகவே விருப்பம் தெரிவித்ததன் காரணமாக, 2–1–2020 முதல் பொதுப் பணித் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின்மூலம் மறு குடியமர்வு செய்யும் பணி மீண்டும் துவங்கியது. 5–1–2020 வரை 590 குடும்பங்கள், சத்தியவாணிமுத்து நகரில் வசிக்கும் பெரும்பாக்கம் திட்டப் பகுதிக்கு மறு குடியமர்வு செய்யப்பட்டனர். மறு குடியமர்வு செய்யப்படும் குடும்பங்களுக்கு வாகன வசதிகள், பெருநகர சென்னை மாநகராட்சியால் செய்யப்பட்டு, 3 நாட்கள் உணவும் வழங்கப்பட்டது.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் சில, பல குறைகளை இங்கே

சொன்னார். அது உண்மையில்லை. பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி மையங்கள், பள்ளிக்கூடங்கள், அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி, தொழிற்பயிற்சி மையம், நியாய விலைக் கடைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பேருந்து வசதிகள், காவல் நிலையம், ஆவின் பாலகம், பூங்காக்கள், இடுகாடு, சுடுகாடு போன்ற சமுதாய கட்டமைப்பு வசதிகள் ஆகியவை வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேலும், மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த குழும நிதி சுற்றுச்சூழல் திட்டத்தின்கீழ் தரமான வீடுகள் ஒதுக்கப்பட்டதோடு, கூடுதலாக இடமாற்றப் படியாக ரூபாய் 5,000/– ரொக்கமாக வழங்கப்படுகின்றது. மேலும் பிழைப்பு ஊதியத் தொகையாக மாதம் ரூபாய் 2,000/– வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை, போன்றவையோடு முகவரி மாற்றம் முகாம்மூலம் குடும்பங்களுக்கு முகவரி மாற்றம் செய்தும் தரப்படுகின்றன. மறு குடியமர்வு செய்யப்பட்ட குழந்தைகளின் கல்விக்காக, தீவிர பள்ளி சேர்க்கை முகாம், பள்ளிக் கல்வித் துறையினரோடு ஒருங்கிணைந்து நடத்தப்பட்டு, குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள். மறு குடியமர்வு செய்யப்படுவதற்கு முன்பு, அவர்கள் படித்த பள்ளிகளில் படிக்க விரும்பும் குழந்தைகளுக்கு இலவச பேருந்து வசதியும் ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தொழிற்பயிற்சிகள், சிறுதொழில் செய்ய பொருளாதார உதவிகள் மற்றும் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் போன்றவற்றை, மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வண்ணம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் அங்கே குடியமர்த்தப்பட்ட ஏழையெளிய மக்களுக்கு வழங்கி வருகிறது என்பதனையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS